REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 8உ செவ்வாய் (21—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 9உ புதன் (22—5—57) இதழ் [293

'இயந்திர வாக்குப் பதிவு வேண்டாம்'

புதுடில்லி, மே 20—

தானாகவே இயங்கும் வாக்குப் பதிவு இயந்திரத்திற்குப் பதிலாக மாநிலங்கள் சபையில், சில உறுப்பினர்கள் இன்று பழைய வாக்குப் பதிவு முறையையே விரும்பினர் என்று தெரிகிறது.

சில நாட்களுக்குமுன், அந்த இயந்திரம் மூலம் வாக்குப் பதிவு நடைபெற்றபோது திட்ட மந்திரி நந்தா, தவருக சர்க்காருக்கு எதிராக ஓட்டுப் பேட்டுவிட்டதை நினைத்துக்கொண்ட உறுப்பினர்கள், தாங்களாகவே எழுந்து நின்று ஓட்டுப் போட்டிருக்கின்றனர். இந்த முறை சற்றுக் காலதாமதமாகுமானாலும், உறுதி தவருது என்றும் அவர்கள் கருதுகின்றனராம்.

'மதுவிலக்குக் கொள்கை தோல்வி கண்டுவிட்டது'

'காந்தியார் இருந்திருந்தால் சட்டத்தை ரத்து செய்யவே கூறுவார்'

மாநிலங்கள் சபையில் முன்னுள் மந்திரி ராஜகுமாரி பேச்சு

புதுடில்லி, மே 20—

"மதுவிலக்கு வெற்றி பெறவில்லை; எனவே, அந்தச் சட்டத்தை ஒழித்துவிட வேண்டும்" என்ற குரல், மத்திய மந்திரி பதவியிலிருந்து சில நாட்களுக்கு முன்பு விலகிய இராஜகுமாரி அமிர்தகௌரியிடமிருந்து எழுந்துள்ளது.

மாநிலங்கள் சபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பேசிய அவர் கூறியதாவது:—

"மத்திய மந்திரிகளும், இதர மாநில காங்கிரஸ் மந்திரிகளும் மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெற்றதாக நெஞ்சில் கைவைத்துச் சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்."

"நான் கூறுகிறேன் — 'அது தோல்வி கண்டுவிட்டது; இனியும் தொடர்ந்து அப்படித்தான் இருக்கும்'—என்று!

துருக்கியும், ரஷ்யாவும்

"துருக்கி முயற்சித்தது — தோல்வி கண்டது! ரஷ்யா முயற்சித்துத் தோல்வியுற்றது! அமெரிக்காவும் முயற்சித்துத் தோல்வியே கண்டது!

"இந்தியாவில் என்ன நிலைகளிருப்பினும் மிகக் கொஞ்சம் பேர்தான் குடிக்கின்றனர். குடிப்பழக்கத்திற்கு ஆளானோர் ஒரு சதவிகிதமே! மதுவைத் தொடுபவர்கள் 10 சதவிகிதத்திற்கும் குறைவு!

"ஆனால், மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருப்பதால், சர்க்காருக்கு வரவேண்டிய பணம் கள்ளச்சாராயம் காய்ச்சுவோருக்குப் போய்விடுகிறது. இவர்கள்தான் மதுவிலக்கு பற்றி தீவிரமாயிருக்கின்றனர்.

காந்தியார் இருந்திருந்தால்

"காந்தியார் இருந்திருந்தால், மதுவிலக்குக் கொள்கையிலும்—வேறு பல விஷயங்களைப் போலவே எனக்குத் தெரியும்—'மதுவிலக்கை ரத்து செய்துவிடுங்கள்,' என்றுதான் கூறுவார்! அவர், நிர்வாகத்தில் அளவு மீறிய ஊழலும், கள்ள மதுக் காய்ச்சலும் பெருகிவிட்டதைக் கண்டபின்னும், மதுவிலக்கு வேண்டுமெனக் கூறமாட்டார்; மாருக வேறு வழிகளைத் தேடுமாறு கூறியிருப்பார்."

வரி விதிப்பிலும் வழுக்கி விழுந்து விட்டாராம்!

வருந்துவதாகக் கூறுகிருர் டில்லி மந்திரி

சந்தர்ப்பத்தைச் சிலர் பயன்படுத்திக்கொண்டு சில்லரை விலைகளை உயர்த்திவிட்டனராம்!

புதுடில்லி, மே 20—

கெரோசின்மீது எதிர் வரியும், பத்திரிகைக் காகிதத்தின்மீது சுங்கத் தீர்வையும் தவறுதலாக வரவு-செலவுத் திட்டத்தில் உயர்த்தப்பட்டு விட்டதாம்!

இதுபற்றி வருத்தம் தெரிவித்துக் கொள்வதாக, நிதி அமைச்சர் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

'தவறுதலுக்காக வருந்துகிறேன்' என்று கூறிய அவர், 'இவற்றின்மீது ஏதாவது வரி ஏற்கனவே வசூலிக்கப்பட்டிருந்தால் அது திருப்பித் தரப்படும்' என்று வேறு கூறியுள்ளார்.

தாம் திரும்பப் பெற்றுக்கொண்ட மண்ணெண்ணெய் வரியை உண்மையிலேயே விதித்திருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய விலை உயர்வைவிட, இப்போது மண்ணெண்ணெய் விலை அதிகமாக இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'நான் விதித்த வரிப்படி 5-புட்டிகள் எண்ணெய்க்கு ஒரு புதிய காசுதான் அதிகமாகும்; ஆனல் சிலர், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சில்லரை விலைகளை உயர்த்திவிட்டனர்' என்று நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

வெடிப் பொருள் தயாரிப்பு மீது கட்டுப்பாடு

புதுடில்லி, மே 20—

வெடிப் பொருள் தயாரிப்பு மீது கட்டுப்பாடு கொண்டுவர இந்திய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக மாநிலங்கள் சபையில் மத்திய அமைச்சர் தத்தார் தெரிவித்துள்ளார்.

டெல்லியின் வரி விதிப்புகள்: அமிர்தகௌரி போர்க்கோலம்

'ஏழை எளியோர் மேலும் ஏழைகளாவர்'

'மந்திரிகளின் ஆடம்பரச் செலவு குறைக்கப்படாதது ஏன்?'

மாநிலங்கள் சபையில் கண்டனம்

புதுடெல்லி, மே 20—

"எந்த ஒரு சர்க்காரின் நோக்கமும் ஏழைகளது ஏழ்மையை ஒழிப்பது தான்; ஆனல், நமது சர்க்காரின் வரி விதிப்புகள் வேறு திசையில் செல்கின்றன.

"ஏழைக்குத் தேவைப்படும் பல பொருள்கள்மீது—தீப்பெட்டி, தேயிலை, காப்பி முதலியவைமீது வரி விதிப்பு அதிகரித்திருக்கிறது; தபால் கார்டு விலை உயர்த்தப்படுகிறது; இரயில் கட்டணம் உயருகிறது. இரயில் கட்டணத்தை உயர்த்தியவர்கள் விமானப் பிரயாணக் கட்டணத்தை உயர்த்தியிருக்கலாம். கார்டு விலையை உயர்த்தியது ஏன் என்று தெரியவில்லை? இந்த நிலைகள், ஏழையை வாழவொட்டாமல் செய்யும்"

என்று, பெரும் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிருர், முன்னுள் டெல்லி மந்திரி இராசகுமாரி அமிர்தகௌரி அவர்கள்!

மாநிலங்கள் சபையில், வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது பேசிய அவர், மேலும் குறிப்பிட்டதாவது:—

"எல்லோரும் தியாகம் செய்யத்தான் வேண்டும் என்கிருர் நிதிமந்திரி; ஒப்புகிறேன். ஆனல், முடிந்த மட்டும் தானே தியாகம் செய்ய முடியும்?

"மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதால் தான் விலைகள் ஏறுகின்றன என்கிருர்கள்; ஆனல், நான் மிகச் சந்தேகப்படுகிறேன். 'மக்களின் வருமானம், விலை ஏற்றத்திற்கு ஒப்ப அதிகரித்திருக்கிறதா?' என்பது குறித்து! பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தினுல்தான் விலைகள் ஏறுவதாகக் கூறப்படுகிறது. எனவே நாம், இன்னும் இந்த முறையை நீடித்தால், விலைகள் கட்டுக் கடங்காமல் ஏறிவிடக்கூடும் என்றும் எச்சரிக்க விரும்புகிறேன்.

"மத்திய — மாநில மந்திரிகள் வெகு ஆடம்பரமாகச் செலவு செய்கின்றனர். இதில் நிரம்பச் சிக்கனம் வேண்டும்."

12,000 விஞ்ஞான ஊழியர்கள் கண்டனக் குரல்!

லண்டன், மே 19—

"மனித சமுதாயத்திற்கு உடல் நலம் கெடுவது தெரிந்தும், தொடர்ந்து அணு ஆயுதச் சோதனைகளை பிரிட்டன் நடத்துவது மிகவும் வருத்தத்திற்குரிய தாகும்" என்று பிரிட்டிஷ் விஞ்ஞான ஊழியர் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தக் குழுவில் 12,000 விஞ்ஞான ஊழியர்கள் அங்கம் வகித்துள்ளனர்.

கேரளத்தில் புதிய பருத்தி ஆலை

நவீன வசதிகளுடன் அமையும்?

கோவை, மே 20—

கேரளத்தில் முதல்தரமான நவீன வசதிகளுடன் கூடிய பருத்தி ஆலை ஒன்றை ஏற்படுத்துவது குறித்து கேரள முதலமைச்சருடன் கோவையைச் சேர்ந்த எஸ். நரசிம்மன் கலந்து பேசியுள்ளார்.

இந்த ஆலையில் தொழிலாளர்களுக்கும், கேரள அரசாங்கத்திற்கும் நிறைய பங்கு தரப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இலஞ்ச ஊழலை வேரறுக்க புதிய முறை வகுக்கிருர்கள்!

கிரிமினல் சட்டம் கடுமையாகுமாம்

புதுடில்லி, மே 20—

அரசாங்க இலாகாக்களில் இலஞ்சத்தை அடியோடு ஒழிக்க டில்லியில் தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்படுமாம்.

இந்த வேலையை அந்தப் பிரிவிடம் தனியாக ஒப்படைப்பது பற்றி இந்திய அரசாங்கம் இப்போது ஆராய்ந்து வருகிறதாம்.

தற்போதுள்ள கிரிமினல் சட்டமும் இதற்காகக் கடுமையாக்கப்படுமாம். பொதுமக்களும் இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று மக்கள் சபையில் இந்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் தெரிவித்துள்ளார்.

அரிசி பதுக்கல் தடுக்கப்படுமாம்!

தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளார்களாம்!

ஆனல் தகவல் தரமுடியாதாம்

புதுடில்லி, மே 20—

அரிசி பதுக்கலைத் தடுப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாம்.

அந்த நடவடிக்கைகள் எத்தகையன என்பது பற்றி இப்போது தகவல் தர முடியாது என்றும், தென்னிந்தியாவுக்குத் தேவையான உணவுப் பொருள் அனுப்பப்படும் என்றும் மத்திய உணவு அமைச்சர் ஜெயின் மக்கள் சபையில் பதிலளித்துள்ளார்.

சந்தேகம்! சந்தேகம்!!

சேலம் - பெங்களூர் இரயில்பாதை அமையுமா

புதுடில்லி, மே 20—

சேலத்திலிருந்து பெங்களூர் வரை இரயில் பாதை அமைப்பது பற்றிய உண்மையான தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன.

'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த இரயில் பாதை அமைப்பு வேலை நிறைவேற்றப்படுமா?' என்று மக்கள் சபையில் கேட்கப்பட்டபோது, 'அதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகக் காணப்படவில்லை' என்று மத்திய இரயில்வே அமைச்சர் ஷாநவாஸ்கான் பதிலளித்துள்ளார்.

இந்தப் பாதை அமைப்புக்கான துப்புறவு வேலை இந்தகிங்களுடன் முடிவு பெறுகிறதாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21--5--57 செவ்வாய்

ஆறு காசு அஞ்சல் அட்டை!

இரண்டாவதுத் திட்டத்தின் நிறைவேற்றத்தை ஒரு புகலாகக் காட்டி, புதுப் புது வரிகளைப் போட்டு பெரும்பான்மையினராக உள்ள ஏழை எளியவர்களைப் ‘பகற்கொள்ளை’ அடிக்க நிதிஅமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முன்வந்துவிட்டார். அவருடைய இரக்கமற்ற அரக்கத் தன்மையை இந்தியப் பிரதமர் நேருவும் ஆதரித்து எவ்வளவு கேடு பயப்பனவாக இருந்தாலும் புது வரிகளைப் பொதுமக்கள் கொடுக்கத்தான் வேண்டும் எனப் போதித்திடவும் துணிந்துவிட்டார்.

ஆங்கில ஏகாதிபத்தியக் காலத்தில் அஞ்சல் முறை புகுத்தப்பட்டது. அந்த அஞ்சல் முறை நாளாக நாளாக, மேலும் மேலும் வளம் பெற்று, விரிவாக்கப்பட்டு வந்திருக்கின்றது.

முதல் முதலாக அஞ்சல் அட்டையின் விலை காலணாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த விலை விகிதம் பல ஆண்டுக் காலத்துக்குப் பிறகு அரையணாவாக உயர்த்தப்பட்டது.

இவ்வாறு உயர்த்தப்பட்ட அஞ்சல் அட்டையின் காலணா விலைஉயர்வை, அக்காலத்தில்கண்டிக்காத காங்கிரசு ஏடுகள் கிடையாது. காலஞ்சென்ற மோதிலால் நேருவிலிருந்து, கடைநிலை காங்கிரசு ஊழியர் வரை இக்காலணா விலை உயர்வைக் கண்டித்துப்பேசி உள்ளனர்.

அந்தக் காலத்தில் டில்லி சட்டசபைக்கு எந்தக் கட்சி சார்பும் இல்லாது சுயேச்சையாகப் போட்டியிட்டவர்கள் கூட, அஞ்சல் அட்டையின் காலணா விலை உயர்வை மக்கள் முன்வைத்து மக்கள் ஆதரவைக் கோரியுள்ளனர். காங்கிரசுக் கட்சியின் சட்டசபை வாரிசாகப் பணியாற்றியதாகக் கூறப்படும் சுயராச்சிய கட்சித் தலைவர்களும், டில்லி சட்டசபையில் மீண்டும் காலணா விலைக்கே அஞ்சல் அட்டையை விற்க முன்வரவேண்டும் என, நாவரண்டுபோகும் மட்டும் கனத்த குரல்கொண்டு கோரியுள்ளனர்.

அஞ்சல் அட்டையின் காலணா விலை உயர்வை ஏழை ‘இந்திய மக்கள்’ தாங்கிக்கொள்ள முடியாது என கண்ணீர் வடித்தனர் காங்கிரசுத் தலைவர்கள். அன்னிய ஆட்சியாக இருப்பதினால்தான் அனைவருக்கும் பயன்பட்டுவரும் அஞ்சல் அட்டையின் விலையைக்கூட நூறு சதவிகிதம் உயர்த்த முன்வருகிறது என்றும், சொந்த ஆட்சியாக இருந்தால் இப்படி பொது மக்களைத் துன்புறுத்த விரும்பாது என்றும், சுதந்திர முழக்கமிட்டனர் அன்று காங்கிரசுக் கட்சியினர்.

சுதந்திரம் கிடைத்தவுடனே, அன்னிய ஏகாதிபத்திய ஆட்சியில் அரையணா விலையாக இருந்துவந்த அஞ்சல் அட்டை முக்காலணா விலையாக உயர்த்தப்பட்டது. முன்னாள் அன்னிய ஆட்சி உயர்த்திய காலணா விலை கூடுதலுக்கு எதிர்க் குரல் கொடுத்துவந்த காங்கிரசு கட்சியினர், முன்னாள்கூறின அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுகின்றவர்களாக, அஞ்சல் அட்டையின் விலையில் மேலும் ஒரு காலணாவைக் கூடுதலாக்கிவிட்டனர். அன்னிய ஆங்கில ஆட்சியில் ஒரு காலணாவைக் கூடுதலாகக் கொடுப்பதற்கும் சக்தி இல்லாதுக் கிடந்த மக்கள், ஒரே இரவில் மேலும் ஒரு காலணாவைக் கூட்டிக்கொடுக்கக்கூடிய சக்தியை—பணபலத்தைப் பெற்றுவிட்டிருக்கக்கூடும் என்ற நம்பிக்கையினாலோ என்னவோ, அரையணா அஞ்சல் அட்டையை எதிர்த்த அதே காங்கிரசுக் கட்சியினர், மனமகிழ்வுடனும் பேரார்வத்துடனும் முக்காலணா அஞ்சல் அட்டையை விலை கூறி விற்க முன்வந்தனர்.

அஞ்சல் அட்டையை முக்காலணா விலைக்கு விற்க வேண்டாம்; அன்னிய ஆங்கில ஆட்சியினர் விற்கத் துணிந்த அரையணா விலைக்கு விற்கவாவது சொந்த ஆட்சியினர் ஏழை மக்கள்மீது இரக்கங் காட்ட வேண்டும் என்று, ஒவ்வொரு ஏழையின் இதயமும் கோரிக்கொண்டுவந்தது. அவ்வாறு கோருவதற்கு ஏழைமக்களுக்கு காங்கிரசு ஆட்சியில் அறவே உரிமை கிடையாது எனத் திட்டவட்டமாகக் கூறுவதே போன்று, நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார், அஞ்சல் அட்டையின் விலையை ஒரு அணாவிற்கு உயர்த்திவிட்டிருக்கின்றார்.

காலணாவிலையில் இருந்த அஞ்சல் அட்டையை அரையணா விலைக்கு உயர்த்தியபோது, அன்னிய ஆங்கில ஆட்சி ஒரு நியாயமான காரணத்தைக் காட்டியது. அதாவது, அஞ்சல் துறை இலாபகரமாக நடைபெறவில்லை; பெருத்த நஷ்டம் தரும் துறையாக இருந்துவருகிறது. அஞ்சல் அட்டை விலையில் மேலும் ஒரு காலணா கூட்டுவதின் மூலம் அத்துறை மூலம் ஏற்படும் நஷ்டத்தைக் குறைந்த அளவு குறைக்கவாவது கொள்ள முடியும் என்று அன்னிய ஆட்சி நியாயம் பேசியது. அது காட்டிய நியாயம் நூற்றுக்கு நூறும் உண்மையுமாகும். ஆனால், அன்னிய ஆட்சி காட்டிய நியாயத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, காலணா விலை உயர்வைக் கண்டித்து நியாயம் பேசினர் காங்கிரசுக் கட்சியினர்.

அன்னிய ஆங்கில ஆட்சி பேசிய அதே நியாயத்தை, இன்று காங்கிரசு ஆளவந்தார்கள் பேசமுடியாது. அன்னிய ஆட்சிக் காலத்தில் இருந்ததுபோல், அஞ்சல் துறை இன்று குறைந்தபட்சம் நஷ்டத்திலும்கூட நடைபெறுவதாக இல்லை. இலாபம் தரும் நிறுவனமாக அஞ்சல் துறை இன்று இருந்துவருகிறது.

நஷ்டத்தை இருந்துவந்த அஞ்சல் துறை நல்ல இலாபந் தரும் துறையாக இரண்டு மூன்று ஆண்டுகளாக மாறிவிட்டது. இலாபம் தரும் நிறுவனமாக இன்று அஞ்சல் துறை இருந்துவருகிறது. காங்கிரசு ஆளவந்தார்கள் எதிர்பார்த்ததைவிட நான்கு கோடி ரூபாய் அத்துறை மூலம் இலாபம் கிடைத்திருக்கின்றது.

இருந்தாலும்; அஞ்சல் அட்டையின் விலையை 6 புதிய பைசாவாக உயர்த்த நிதி அமைச்சர் துணிந்துவிட்டிருக்கின்றார். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவாக இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்துவந்த ஏழை எளியவர்கள் அனைவரும் பணம் பெருத்தவர்களாக மாறிவிட்டிருக்கின்றனர் என்ற எண்ணத்தில், அஞ்சல் அட்டையின் விலையை 6 புதிய காசுக்கு, நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் உயர்த்தத் திருவுளம் கொண்டுவிட்டாரோ என்னவோ, - யார் கண்டார்கள்?

அஞ்சல் அட்டையின் விலையை 6 புதிய காசுக்கு உயர்த்தி இருப்பதின் மூலம், சில லட்ச ரூபாய்களைத்தான் நிதி அமைச்சர் பெறப்போகின்றார். இந்த சில லட்ச ரூபாய் வருமானத்தைக்கொண்டு தான் இரண்டாவதுத் திட்டத்தை நிறைவேற்றப் போவதாக நிதி அமைச்சர் கூறுவது நகைப்புக்குரியதாகும். திட்ட ஏற்பாடுகளில் நிர்வாகத் துறையில் செழிக்கப்பட்டு வருவதாக அவ்வப்பொழுது சுட்டிக்காட்டப்பட்டுவரும் வீண் செலவுகளைக் குறைக்க நிதி அமைச்சர் முன்வந்தால் ஏழை மக்களையே பெரிதும் பாதிக்கக்கூடியதும், சில இலட்சம் ரூபாய்களையே வருமானமாகத் தரக்கூடியதுமான 6 காசு விலை உயர்வை, அஞ்சல் அட்டையின்மீது ஏற்றுவதற்கான தேவையே நிதி அமைச்சருக்கு ஏற்படாது.

தன்மானம் தழைக்கிறது!

வேலூர், மே 20—

‘சென்னை மாநில என். ஜி. ஓ. சங்கம்’ என்றழைக்கப்படுவதை மாற்றி, இனி ‘தமிழ் நாடு என். ஜி. ஓ.-க்கள் சங்கம்’ என்று திருத்தி அமைப்பதென வேலூரில் 2 நாட்களாக நடைபெற்ற என். ஜி. ஓ. சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

சென்னை நகரத்திலிருந்து மட்டுமே தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையை ஒழித்து, மாநிலத்தின் எப்பகுதியிலிருந்தும் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டதாம்.

‘ஸ்டர்லிங்’ நிலுவை கரைகிறது!

புதுடில்லி, மே 20—

ஸ்டர்லிங் நிலுவையில் இதுவரை பெற்றதுபோக பாக்கி நிலுவையில் உள்ளது ரூ. 490 கோடி மட்டுமே என்றும், இந்தத் தொகையில்கூட இந்த ஆண்டு ரூ. 90 கோடி திரும்பப் பெறப்படும் என்றும், டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்துள்ளார்.

பண்டிதர் ஆதிக்கம் மேலும் 10 ஆண்டுகள் நீடிக்குமாம்!

கொழும்பு, மே 18

“இந்தியாவில் இன்னும் 10 ஆண்டுகள் பண்டித நேருவின் ஆதிக்கம் நீடிக்கும். அவருடைய வாரிசுகள் எனப்படுவோர், அதற்கு முன்னரே போய்விடுவர். பண்டித நேருவுக்குப் பிறகே இந்தியாவில் தலைமைப் போட்டிகள் தலைதூக்கும்” என்று, பி. சோ. தலைவர் அசோக மேத்தா தெரிவித்துள்ளார்.

‘விடுதலை வீரர்களுக்கு எதிரிகள் ஏராளமுண்டு’

‘நிரந்தர விடுதலைக்குத் தற்காலிகத் தொந்தரவுகளை அனுபவிக்கிறோம்’

‘சுதந்திர எழுச்சி அழிவுற்றதாக ஏதேனும் ஆதாரமுண்டா?’

சிறுபான்மையினர் சிந்தனையை அடக்க முயலுவதால் ஏற்படும் விபரீதம்

சி. பி. சிற்றரசு தெளிவுரை

25—4—57ல், சென்னை—வண்ணைபம்பதி பாண்டியன் நினைவு மன்றத்தின் 5-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

“ஐந்தாண்டுகட்குமுன், குண்டர்களால் கொலையுண்ட தோழர் கே. எஸ். பாண்டியன் அவர்களின் நினைவாக இங்கே கூடியிருக்கிறோம். ஒரு தேசிய இயக்கம், தான்கொண்ட கொள்கைக்கு என்னென்ன ஈடுசெய்ய வேண்டுமோ அவைகளைமாத்திரமல்லாமல், எல்லாவற்றிற்கும் மேலாக தோழர் பாண்டியன், தன் உயிரையே தியாகம் செய்திருக்கிறார்.

“கறைபடிந்த இம்மண்ணைதான் சிந்திய செங்குருதியால் அவர் செம்மையாக்கியிருக்கின்றார்.

“நிரந்தரமான விடுதலையடைவதற்காக தற்காலிகமான தொந்தரவுகளை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்; ஆனால் தோழர் பாண்டியன், நிரந்தரமான விடுதலைக்காக நிரந்தரமான துன்பத்தையே அனுபவித்துவிட்டார்.

“‘விடுதலை மரம் செழித்தோங்கி வளருவதற்குத் தியாகிகள், எதிரிகள் ஆகியோரின் இரத்தம் அடிக்கடி தேவைப்படுகிறது; அதுதான் அதன் இயற்கை உரமாகவும் இருக்கிறது’—என்பதைப்போல், நமது விடுதலை மரம் வளருவதற்குத் தோழர் பாண்டியன் இரத்த தானம் செய்திருக்கிறார். அம்மாபெரும் தியாகிக்கு நமது தலைகவிழ்ந்த வணக்கத்தைச் செலுத்துவோம்.

“பாண்டியன் ஏன் கொல்லப்பட்டார்? இதை நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம் — எதிரிகள் தெரிந்துகொள்ளவில்லை. தோழர் பாண்டியனைக் கொன்றுவிடுவதின் மூலம் இயக்க விளக்கு அணைந்துவிடும் என்று நம்பினர் ஏமாளிகள் — உலக வரலாறறியாத வம்பர்கள்!

“உத்தமர் காந்தியாரைக் கொன்ற பிறகு காங்கிரஸ் அழிந்துவிட்டதா — ஜான்ஹெஸ், ஜான் விக்ளிப் — ஜான் பாட்லி என்பவர்களை தீயிட்டுக் கொளுத்திய பிறகு மறுமலர்ச்சி இயக்கங்கள் மண்டலத்திலிருந்துமறைந்து அல்லது மடிந்து போய்விட்டனவா? சுதந்திர எழுச்சி கொண்ட வீரர்களை அடக்க அடக்க சுதந்திர எழுச்சி மேலோங்கி வளர்ந்திருக்கின்றதே தவிர, அது அழிந்துவிட்டதாக ஆதாரமே இல்லை.

“கெடுதலுக்குக் கெடுதலைச் செய்து நாம் விடுதலையைப் பெற விரும்பவில்லை. நாம் தீவிரமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் கண்ணியமாக இருக்கிறோம்; நாடு விடுதலை அடையவேண்டுமென்பதற்காகத்தான் நாம் கட்டுப்பாடாக இருக்கவேண்டுமென்று கருதுகிறோம். உரிமையை அடையவேண்டும் என்பதற்காகத்தான், ‘கடமையைச் செய்யத் தவறுதீர்’ என்று எச்சரிக்கை செய்த வண்ணம் இருக்கிறோம்!

நாட்டின் நிலை என்ன?

“நேரு தென்னகம் வருகிறார் என்றால், ஏழைகளை அவர் கண்ணுக்குப்படாமல் விரட்டி விரட்டியடிக்கின்றார்கள்! இங்கேதான் நாம் குறுக்கிட்டு ஒரு கேள்வியைக் கேட்கிறோம் — ‘அன்பர்களே! அரசியல் மேதைகளே! ஆளும் கட்சியினரே! அபேதவாதம் கொண்டு வரப்போவதாக வாய்ப்பறையடிக்கும் வித்தகர்களே! தயவு செய்து அந்த ஏழைகளை விரட்டாதீர்கள்! ஏழ்மையை விரட்டுங்கள்; சோம்பேறிகளை விரட்டாதீர்கள்— சோம்பலை விரட்டுங்கள்—சுறுசுறுப்பைக் கொண்டுவாருங்கள்,’ என்று! ஒரு அதிமேதை நகர்வலம் வருகிறபோது பஞ்சைப்பராரிகள் அவர் கண்ணில் தென்படக் கூடாது என்று சட்டம்கூட இயற்றிவிடலாம்; ஆனால், அந்தச் சட்டம் சரியானதுதானா, நீதியை அனுசரித்து அந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டனவா?— என்று இன்றுள்ளோர் கேட்க அஞ்சினாலும், வருங்காலத்தார் கேட்காமல்விடமாட்டார்கள்.

“இதேபோலத்தான் அன்று, பிரெஞ்சு நாட்டிலே, விபச்சாரிகளை துரத்தி துரத்தி போலீஸ்காரர்கள் வேட்டையாடிக்கொண்டிருந்தபோது, எழுத்துவேந்தன் எமிலி ஜோலா கேட்டான்— ‘பிரெஞ்சு நாடே! போலீஸ் படையினரே! இந்த ஏழை எழுத்தாளன் சொல்வதைத் தயவு செய்து கொஞ்சம் செவி சாய்த்துக் கேளுங்கள். இந்த விபச்சாரிகளை விரட்டாதீர்கள்—தயை தாட்சண்ணியமில்லாமல் விபசாரத்தை விரட்டுங்கள்’— என்று!

“அடிக்குப் பயந்து வந்து ஜோலாவின் பக்கத்திலே பதுங்கிய நாணுவைக் காப்பாற்றினன்; அந்த நாணுவின் பெயரால் பெருங்கதை ஒன்று பிறந்தது; அதுவே, சிறந்த இலக்கியமாயிற்று. அங்கே அந்த ஒரு ஜோலா நடத்திய பேறு முனைப்போர், குடியாசுத் தலைவரையே மாற்றி அமைத்துவிட்டது; முதலாவது, இரண்டாவது இராணுவ நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டுவிட்டன.

“அங்கே, அந்த ஜோலா ஒரு கட்சியைச் சேர்ந்தவன் கூட அல்ல—தனி மனிதன்! அவன் எழுந்து அவ்வளவு கடுமையாகத் தாக்கியது அநீதியை!

“இங்கே நண்பர் பாண்டியன் ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்; அவர் சார்ந்திருந்த கட்சி சிறுபான்மையினதாக இருக்கலாம்; சிறுபான்மைக் கட்சியினரின் சிந்தனையையும், அவர்களுடைய கருத்தறிவிப்பையும் அடக்கினால் அது சமூக முன்னேற்றமடைய முடியாமல் தடுத்து இறுகிப் போகும்படிச் செய்துவிடும்.

“சிறுபான்மைக் கட்சியினரின் அனுபவத்தினால் பெரும்பான்மையோரும் ஊக்கமடைகின்றார்கள்.

(4-ம் கலம் பார்க்க)

கழகக் கொள்கைகளை வரவேற்பதில் கிராம மக்களிடையே பேரார்வம்!

என். வி. நடராசன் சுற்றுப் பயண விவரங்கள்

துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மே திங்கள் 8-ம் நாளிலிருந்து 14-ம் நாள் வரை தொடர்ந்து மேற்கொண்ட சுற்றுப் பயணத்தில் கிராம மக்கள் கழகத்தின் கொள்கை கோட்பாடுகளில் காண்பித்த பேரார்வமும், எழுச்சியும் குறிப்பிடத்தக்கதாகும். சுற்றுப் பயணத்தின்போது ஆங்காங்கு கழக நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

8-5-57 :

குழியியம்பாறை பாண்டியனூர் திடலில் தி. மு. கழகச் சார்பில் மாபெரும் கூட்டம் மாலை 7-மணிக்கு நடைபெறறது. சுற்றுப்புற கிராமத்திலிருந்து ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். தோழர் ஜி. டி. ஜமது தலைமை தாங்கினர். தோழர் பி.சமதர்மம் பேசியபின் தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தின் எதிர்காலப் பணியினை விளக்கிச் சொற்பொழிவாற்றினர். துவக்கத்தில் மேளவாத்தியங்களுடன் வரவேற்பும்—ஊர்வலமும் நடந்தேறியது. அன்றிரவு நால்வரின் குழுவினரால் பிரச்சார நாடகமும் நடைபெற்றது.

9-5-57 :

துறையூர் அடுத்த சோபானுபுரம் தி. மு. கழகச் சார்பில் அழகிரி திடலில் மாலை 7-மணிக்குப் பொதுக்கூட்டம் தோழர் எஸ்.பி. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தணிகாசலம், அ. துரைராஜ், மு. பெ. முத்துக்கருப்பன், கோவிந்தன், கலியபெருமாள் ஆகியோர் பேசியபின் தோழர் என். வி. நடராசன் அவர்கள், 'தேர்தலில் தி. மு. கழகம் அடைந்துள்ள வெற்றிகள்' என்பதை விளக்கிப் பேசினர்.

கூட்டத் துவக்கத்தில் துணைப் பொதுச்செயலாளருக்கு அண்ணா படிப்பகத்தின் சார்பில் வாழ்த்து இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

10-5-57 :

சீர்காழி அடுத்த பெருந்தோட்டம் தி. மு. கழகத் துவக்க விழா இரவு 7-மணிக்கு நடைபெற்றது. விவசாயத் தொழிலாளர்களும் பொதுமக்களும் திரண்டிருந்தனர். தோழர்கள் பொறையார்-ஜம்பு, கோபாலகிருஷ்ணன், மற்றும் பலர் பேசியபின் என். வி. நடராசன் அவர்கள் 'தி. மு. கழகமும் விவசாயத் தொழிலாளர்களும்' என்பதை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

11-5-57 :

குடந்தை அடுத்த சாமிமலை மனமகிழ்மன்றச் சிறப்புக் கூட்டம் காலை 10 மணிக்குத் தோழர் வி. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் அவர்கள், 'தமிழின் சிறப்பு' எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் பத்மநாபன் உள்ளிட்ட உள்ளூர் தோழர்களும் பேசினர்.

மாலை 7 மணிக்கு குடந்தை அடுத்த கொறுக்கையில் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் வி. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் குடவாசல் கிருஷ்ணமூர்த்தி, நாராயணசாமி, அய்யுப்கான், ராதா, பத்மநாபன், காளிதாஸ் ஆகியோர் பேசியபின், என். வி. நடராசன் அவர்கள் நாட்டுப் பிரிவினைக் கொள்கைக்கு நாடொன்றும் வளர்ந்துவரும் ஆதரவை விவரித்து நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினர்.

12-5-57 :

காலை 11 மணிக்கு, திருப்பூர் வந்து சேர்ந்த துணைப் பொதுச் செயலாளர் என். வி, நடராசன் அவர்களுக்கு இரயிலடியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, நகரச் செயலாளர் முத்துரத்தினம், பல்லடம் பொன்னுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், தொழிலாளர் தோழர்களும் வந்திருந்து மலர் மாலைகள் அணிவித்தனர்.

பகல் 3 மணிக்கு, திருப்பூர் பனியன் பாக்டரி தொழிலாளர் சங்க அமைப்புக் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் கலந்துகொண்டு, தொழிற்சங்க விதிமுறைகளையும், மற்றும் தி. மு. கழகம் தொழிற்சங்கத் துறையில் எந்த அளவுக்கு தொடர்பு கொள்ளும் என்பதையும் விளக்கிப் பேசினர். சங்க அமைப்பாளர் கே. எஸ். மணி நன்றி கூறினர்.

இரவு 7 மணிக்கு வாலிபாளையம் திடலில் தோழர் சே. எஸ். மணி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல் நிலையையும், தி. மு. கழக சட்டசபைக் கட்சியின் பணியினையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, பல்லடம் பொன்னுச்சாமி, முத்துரத்தினம் ஆகியோரும் பேசினர். துவக்5த்தில் விகடக் கச்சேரியும் நடைபெற்றது.

இரவு 10 மணிக்கு, முத்து நகரிலுள்ள கே. வி. கே. சாமி படிப்பகத்திற்குச் சென்று கழகத்தின் எதிர்காலப் பணியினையும் சாமியின் தூய்மையான வேலையையும் விவரித்துப் பேசினர்.

அன்று காலை நகரின் பல இடங்களில் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, சு. துரைசாமி கழகக் கொடிகளை ஏற்றி வைத்தனர்.

13-5-57 :

காலை 9 மணிக்கு, திருப்பூரிலுள்ள கழக சார்பு மன்றங்களுக்கு தோழர்களுடன் துணைப்பொதுச் செயலாளர் சென்று நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

மாலை 7 மணிக்கு, வெள்ளக்கோயில் அடுத்த அரியாண்டிவலசு தி. மு. கழகத் துவக்க விழா தோழர் நல்லசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில் தோழர்கள் பல்லடம் பொன்னுச்சாமி, சி. வேலுசாமி, அ. வீராசாமி ஆகியோர் பேசியபின், என். வி. நடராசன் அவர்கள் பொதுத் தேர்தலுக்குப் பிறகு கிராம மக்களிடையே காணப்படும் புதியதோர் எழுச்சியையும், கழகக் கொள்கைகளையும் விளக்கிப் பேசினர். தோழர் கலைமணி அனைவருக்கும் நன்றி கூறினர்.

14-5-57 ,

வெள்ளக்கோவில் வட்டம் கரட்டுப்பாளையம் தி. மு. கழகத் துவக்க விழா மாலை 7 மணிக்கு நடைபெற்றது; ஏராளமான பொதுமக்களும், விவசாய—நெசவுத் தொழிலாளர்களும் திரண்டிருந்தனர். குட்டம்பாளையம் தோழர் சாமிநாதன் தலைமை வகித்தார். தோழர்கள் சி. கோவிந்தசாமி, கன்னிவாடி பெரியார், பல்லடம் பொன்னுசசாமி, கோவை செழியன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

இறுதியாக என். வி, நடராசன் அவர்கள் தேர்தலில் தி. மு. கழகம் பெற்றுள்ள வெற்றியின் உயர்வைபுர, சட்ட மன்றப் பணியில் கழகம் ஈடுபட்டுள்ள இது சமயம் வாக்காளர் பெருமக்கள் மேலும் ஆதரவு தந்து எதிர்காலத்தில் ஏராளமான வெற்றியைத் தேடித்தந்து நம் தாயகத்தின் உண்மையான விடுதலையைப்பெற கிராம மக்கள் திரண்டெழ வேண்டுமென்றும், அரசியல் துறையில் இனி கிராமாந்திரங்களிலுள்ள மக்கள் அக்கறை காட்ட வேண்டுமென்றும் குறிப்பிட்டு நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

அண்மையில் காங்கிரசிலிருந்து விலகி கழக ஆதரவாளரான தாரை வட்ட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் தோழர் ஆறுமுகம் (கவுண்டர்) அவர்கள் இத்துவக்க விழாவிற்கு முன்னின்று ஆவன செய்ததுடன், கழக வளர்ச்சிக்கு தம்மாலான பணியை புரிவதாகவும் கூட்டத்தில் அறிவித்தார். அன்றிரவு அவரது இல்லத்தில் விருந்துபசாரமும் நடைபெற்றது.

எதிர்ப்புக்குப் பின் இந்த நிலைமையா ?

புதுடில்லி, மே 19—

சென்ற மே 15-ந் தேதியன்று நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கொண்டுவந்த 90 வரி விதிப்புகளை காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிகூடி விவாதித்ததாம்.

அதன் பயனக, கெரோசின், பத்திரிகைக் காகிதத்தின் மீது விதிக்கப்பட்ட புதிய வரிகளை இந்திய அரசாங்கம் வாபஸ் பெற்றுள்ளது.

கெரோசின்மீது தீர்வை விதிப்பதால் ரூ. 20 இலட்சம் அதிக வருமானமும், பத்திரிகைக் காகிதத்தின்மீது வரி விதிப்பதால் தற்போது உள்ள தீர்வை மூன்று மடங்கும் அதிகபடியாக எதிர்பார்க்கப்பட்டதாம்.

புதிய வரி விதிப்பினுல் ஏற்பட்ட விளைவு!

புதுடில்லி, மே 20—

சென்ற ஆண்டு விதிக்கப்பட்ட புதிய வரிகளின் காரணமாக கிராமங்களில் வசிப்பவர்களின் செலவு 1·62 சதவிகிதமும், நகரத்தில் வசிப்பவர்களின் செலவு 3 சதவிகிதமும் அதிகரித்தது என்றும், இப்போது ரூ. 80 கோடிக்கு அதிக வருமானம் கிடைக்க இந்திய அரசாங்கம் 90 புதிய வரிவிதிப்புகளினுல் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு 2·34 சதவிகிதமும்; நகரங்களில் வசிப்பவர்களுக்கு 4·38 சதவிகிதமும் வரி அதிகரித்துள்ளது என்றும் மத்திய நிதி அமைச்சர் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

தபால்—தந்தி ஊழியர்களுக்கு

இட வசதியாம்!

ரூ. 10-கோடியில் திட்டமாம்

இலக்குமணபுரி, மே 20—

இந்தியா முழுமையிலும் உள்ள தபால்—தந்தி ஊழியர்களுக்கு வீடுகளும், ஓய்வு விடுதிகளும் கட்டித் தருவதற்கான திட்டமொன்றை இந்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

இரண்டாவது திட்டத்தின்கீழ் இதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், வசதி யிருப்பின் இன்னும் மூன்று ஆண்டுகளில் திட்டத்தை அமுல் நடத்துவதற்கான வழிகளைக்கண்டறிந்து வருவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

செய்திச் சுருள்

★

தூத்துக்குடி பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்

நிர்வாகிகள் தேர்வு விவரம்

தூத்துக்குடி, மே 14—

13—5—57-ல் இங்குள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

அதுபோது, தோழர்கள் டி. வெற்றிவேல் தலைவராகவும், சண்முகம், கோவில்பிள்ளை துணைத் தலைவர்களாகவும், ஞா. செல்லப்பா செயலாளராகவும், என். சங்கரன், கே. கோபால் துணைச் செயலாளர்களாகவும், கே. அருணுசலம் பொருளாளராகவும், மற்றும் 22 பேர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(ந. நி.)

தோட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

நிர்வாகிகள் தேர்வு விவரம்

14—4—57-ல், குன்னூர் தி. மு. கழகப் பணிமனையில், நீலகிரிப் பகுதி தோட்டத் தொழிலாளர்கள் கூட்டம் திரு. எட்வர்டு மேஸ்திரி தலைமையில் நடைபெற்றபோது, 'நீலகிரி தோட்டத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்' அமைக்கப்பட்டு, தோழர்கள் வி. கா. ஒளியழகன் தலைவராகவும், ஆர். தங்கவேல் துணைத் தலைவராகவும், எஸ். எம். சஞ்சீவிராச செயலாளராகவும், கா. அன்பன் துணைச் செயலாளராக ஆர். சாமுவேல் மேஸ்திரி பொருளாளராகவும், ஆய்வுரையாளர்களாகவும் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன், கோவை சி. கிருட்டிணசாமி ஆகியோரும், 22 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உறையூர் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம்

31—3—57 இரவு 8-மணிக்கு உறையூர் 39, நாச்சியார் மேலத்தெருவில் தோழர் சி. மாரியப்பன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர்கள் பி. பி. எஸ். மணி செயலாளராகவும், எம். வி. நாதன் துணைச் செயலாளராகவும், எம். அப்பாராசு பொருளாளராகவும், மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிவகங்கை அண்ணு படிப்பகம்

1—5—57 இரவு 10-மணிக்கு மேற்படி படிப்பகத்தின் செயற்குழு தோழர் அ. வெங்கிடுசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் நா. மருதுபாண்டியன் செயலாளராகவும், ப. கா. பஞ்சவர்ணம் துணைச் செயலாளராகவும், கருணுகரன் பொருளாளராகவும், 9 போ செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—மயிலை கே. வி. கே. சாமி படிப்பகம்

29—4—57-ல், மேற்படி படிப்பகத்தில் தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றம் சென்றதன் நினைவாக, கொடியேற்றுவிழாவும், பொதுமக்களுக்கு இனிப்பும் — தேனீரும் வழங்கப்பட்டது.

மன்னார்குடி கே. வி. கே. சாமி மன்றம்

14—4—57 இரவு 10 மணிக்கு, மேற்படி மன்றச் செயற்குழு, தோழர் என். கணபதி தலைமையில் நடைபெற்றபோது, தோழர் மு. தில்லைக்கண்ணு வால் கொண்டுவரப்பட்ட 4 முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை—சுந்தராபுரம் கே.வி.கே. சாமி நினைவு மன்றம்

3—5—57 மாலை 6-மணிக்கு மேற்படி மன்றத் திறப்புவிழா தோழர் சு. க. கோபால் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், சண்முகநாதன், புலவர் இராமசாமி ஆகியோர் பேசினர். இரவு 9-மணிக்கு மாறுவேடப் போட்டியில் வெற்றிபெற்றத் தோழர்கள் பொன்முடி, கலைமலை ஆகியோருக்கு பரிசும் வழங்கப்பட்டது.

இரங்கூன்—தாம்புவே அழகிரி படிப்பகம்

7—4—57 இரவு 8 மணிக்கு மேற்படி படிப்பகத்தில் தோழர் கே. ஆர். சந்திவர்மன் தலைமையில் தி. மு. கழகத் தோழர்கள் வெற்றிக்கு பாராட்டு விழா நடைபெற்றது. தோழர்கள் ப. சிவன்ராசன், கே. அப்பாதுரை, எஸ். இராமன், ஆ. வீ. ஆயர்தாசன், கே. எஸ். நாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், எல்லோருக்கும் இனிப்பும் தேநீரும் வழங்கப் பட்டது.

அழகிய பாண்டபுரத்தில் தி.மா.மு. கழகம் துவக்கம்

14-4-57-ல், அழகியபாண்டபுரம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா தோழர் தா. சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. நீலகண்டம் கழகத்தைத் துவக்கி வைத்த பின்னர் தோழர்கள் பலர் மாணவர் கடமைப் பற்றி சொற்பொழிவாற்றினர். கழகச் செயலாளர் சுப்பிரமணியம் நன்றி கூறினர்.

திருவொற்றியூர் கே. வி. கே. சாமி மன்றம்

13—4—57 காலை 9 மணிக்கு வெற்றிபெற்ற கழக சட்ட மன்ற உறுப்பினர்களைப் பாராட்டி, மேற்படி மன்றத்தின் சார்பில் பொதுமக்களுக்கு பாயாசம் வழங்கப்பட்டது: தோழர் எஸ். ஐ. வெங்கட்ராமன் தலைமையில் தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், சி. வி. ஆடலகன், ஏ. வி. ஆறுமுகம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கி சொற்பொழிவாற்றினர். தோழர் இராதாமாணிக்கம் குழுவினரின் இன்னிசை நடைபெற்றது.

கன்னியாகுமரிமாவட்டம் கைத்தறி நெசவாளர் நிறுவனம்

14—4—57 மாலை 4 மணிக்கு நெசவாளர்கள் கூட்டமொன்று கருங்கலில் திரு. பி. சாம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, நெசவாளர்களுக்கு கூலி நிர்ணயம்பற்றியும் நிறுவனத்தின் அலுவல்களை தமிழில் நடத்துவது பற்றியும், 'ரிபேட்' தொகையைப் பற்றியும், 'எஸ். டி. லைசென்ஸ்' ரத்து செய்வது பற்றியும், 'செஸ்' நிதி பற்றியும், நெசவாளர் கூட்டுறவு காலனி ஏற்படுத்தக் கோரியும், விற்பனைக்கு 'வேன்' ஒன்று வாங்குவது பற்றியும், விசைத்தறி திட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் பல நிறைவேற்றப் பட்டன.

அன்பளிப்பு:

9—5—57 காலை 10 மணிக்கு ஒக்கல்-குற்றம் பொறுத்தானிருப்புத் தோழர் அ. வையாபுரி—தோழியர் அஞ்சலை வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் பொ. கணபதி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் அறிவொளி, மாரியப்பன், கோவிந்தராசு, சமுதா, செயராமன், குப்புசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

நெய்வேலியில் நிலக்கரி தோண்டும் வேலை

முதல்கட்டத்தைத் துவக்கிவைத்தார் பண்டிதர்

நெய்வேலி, மே 21—

'தென்னாட்டின் தொழில் உணர்ச்சிக்குக் கட்டியங் கூறும் திட்டமிது' என்ற வாழ்த்துரையுடன், நெய்வேலி நிலக்கரி திட்டத்தினை, முதன்முதலாக பூமியைக் குடைந்து நிலக்கரி தோண்டும் இயந்திரங்களை இயக்கித் துவக்கி வைத்திருக்கிறார், பண்டித நேரு!

நேற்று நண்பகல் 12-மணியளவில், இந்த விழா வெகு கோலாகலமாக நெய்வேலியில் நடைபெற்றது; மாநில மந்திரிகளும், ஏராளமான மக்களும் விழாவில் கூடியிருந்தனர்.

தென்னாடு தொழில் வளர்ச்சியில் மிகப் பின்தங்கிக் கிடக்கிறது என்ற உண்மையையும், தொழில் வளர்ச்சித் திட்டங்களில் தென்னாட்டிற்கு உரிய பங்கினை அளிக்காமல் டெல்லி ஏகாதிபத்தியம் வஞ்சகம் புரிகிறது என்ற அநீதியையும் எடுத்துரைத்து, மக்களின் கவனத்தை இவற்றின் பக்கம் திருப்பிய பிறகு, அந்த மக்களின் கோபக்கனலிலிருந்து தப்ப முடியாத நிலை ஏற்பட்டதும், 'நெய்வேலித் திட்டத்தைத் துவக்குகிறோம்' என்று கூறி இரண்டாண்டுகளுக்கு முன்னர்தான் நெய்வேலியில் வேலை துவங்கப்பட்டது வாசகர்களுக்குக் கவனத்திலிருக்கலாம்.

மேலும் பேசுகையில் பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"தென்னாடு — குறிப்பாக சென்னை மாநிலம் தொழில் துறையில் முன்னேறியாக வேண்டும். இந்த நெய்வேலித் திட்டம் நீங்கள் அப்படி முன்னேறத் துணை புரிவதாக இருக்கும்.

"இங்கு பணி புரியும் எஞ்சினியர்கள், தங்களுடன் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களிடத்தில், இந்தத் திட்டத்தின் உயர்ந்த நோக்கம்பற்றி எடுத்துரைத்து, அவர்களும் இதில் பங்குதாரர்கள் என்பதை உணரச் செய்து, அவர்களது ஆர்வத்தைப் பெருக்க வேண்டும்."

விழாத் துவக்கத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷனின் மானேஜிங் டைரக்டரான டி. எம். எஸ். மணி ஐ. சி. எஸ். அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சென்னை, மே. 19—

"கேரள அரசாங்கத்தின் நிலச் சீர்திருத்தம் திட்டக் குழுவின் சிபாரிசுகளை அனுசரித்தே செய்யப்படும்"

கழகக் கூட்டங்கள்

★

பாண்டிக்குடி :

(அறந்தாங்கி வட்டம்)

கே. வி. கே. சாமி திடலில்

22-5-57 மாலை 6-30 மணிக்கு

தி. மு. கழகத் துவக்க விழா

தலைவர் : ஆ. ரெங்கையா

பேசுவோர்:

அறிவுடை நம்பி

முக. மீரா

இராம. அசோகன்

சிவகுருநாதன்

★

நத்தம் :

23—5—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : எம். எம். மீரான்

பேசுபவர் :

க. அன்பழகன்

எஸ். முத்து

கே. எஸ். சந்தானம்

நெல்லை மாவட்டத்தில் சத்தியவாணிமுத்து

எம்.எல்.ஏ.

★

மே 22 : ஆலங்குளம்

23 : நெல்லை சந்திப்பு—பாளையங்கோட்டை

24 : மேலப்பாளையம்—ஏர்வாடி

25 : கோவில்பட்டி—குளத்தூர்

26 : அத்தூர்க்குடி

(தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., சுற்றுப்பயணத்தில் நெல்லை மாவட்டத் துணைச் செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமி அவர்களும் கலந்துகொள்வார்.)

விஷக் காய்ச்சல்

கொள்ளை நோய் உருவத்தில் பரவுகிறதா ?

மருத்துவ வசதி அளிப்பதற்கு முன்னேற்பாடு

சென்னை, மே 20—

கடந்த 16-ந் தேதியன்று சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்து சேர்ந்த 'ரஜுலா' கப்பலில் இருந்த 1,800 பிரயாணிகளில் பலருக்கு 'இன்புளுயன்சா' எனும் விஷக் காய்ச்சல் பீடித்ததன் காரணமாக அக்கப்பல் துறைமுகத்திற்கு அப்பால் விலக்கி வைக்கப்பட்டிருந்ததல்லவா?

இந்தக் கொடிய தொத்து நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியளிக்க 100 பேர் கொண்ட ஒரு மருத்துவக் குழு அக்கப்பலுக்கு அனுப்பப்பட்டது; ஆனால், இந்தக் குழுவைச் சேர்ந்த 4 நர்சுகளுக்கு 'இன்புளுயன்சா' காய்ச்சல் பிடித்ததாம்.

தற்போது அக்கப்பலில் சுமார் 75 பேர் இந்த வியாதியினால் பீடிக்கப்பட்டுள்ளனர்; 100 பேர் குணமடைந்து வருகின்றனர்; இந்த 175 பேர்களும் இன்று கரையில் இறங்குவார்கள்; உடனே அவர்களை, பூந்தமல்லியில் உள்ள 'விலக்கு முகாமில்' சேர்ப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது; மற்ற பிரயாணிகள் பின்னர் இறக்கப்படுவர் என்று தெரியவருகிறது.

"சென்னை நகரத்தில் 'இன்புளுயன்சா' கொள்ளை நோய் உருவத்தில் பயமுறுத்தி வருகிறது"

என்று, சென்னை கலெக்டர் அறிக்கை விடுத்துள்ளார்.

சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள தொத்து நோய் விடுதியில் இந்த வியாதிக்கு மருத்துவ வசதி அளிக்க நகரசபை ஏற்பாடுகள் செய்திருக்கிறது.

மக்கள் சபையில் இது குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மத்திய அமைச்சர், 'குன்னூர் பாஸ்டர் கழகத்தில், இக்காய்ச்சலுக்கான 1,000 'டோஸ்' மருந்தை 4 கிழமைகளில் தயாரிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,' என்று கூறியுள்ளார்.

ஆந்திரத்தின் ஆறாத்துயரம்

பழந்தலைவர் டி. பிரகாசம் மறைவு

சென்னை, மே. 21—

ஆந்திர கேசரி டி. பிரகாசம் அவர்கள் தமது 88-வது வயதில் நேற்று இரவு 7-35 மணிக்கு இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிவிக்க மிக வருந்துகிறோம்.

கடந்த மே 2-ந் தேதியன்று நோய்வாய்ப்பட்ட அவர் ஐதராபாத் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் வரை அவர் குணமடைந்துவரும் நிலையே நீடித்திருந்தது என்றாலும், நேற்று பகல் 1 மணி அளவில், நோய் கடுமையாக இருந்திருக்கிறது; பின் நிலை மோசமாகி, டாக்டர்கள் அவரைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகள், தோல்வியுற்றன; இரவு ஏழரை மணிக்கு, அவர் ஆவி பிரிந்திருக்கிறது.

அவரது மறைவு, ஆந்திர பிரதேசத்தை மட்டுமின்றி குறிப்பாக தென்னாட்டையும் பொதுவாக இந்தியாவையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஆந்திரத்தின் வரலாற்றில் வீரம் செறிந்த போராட்ட மயமான வாழ்க்கையை மேற்கொண்டிருந்த ஒரு பெரும் வீரத் தலைவரின் அத்தியாயம் முடிவுற்றுவிட்டது.

ஆந்திரம் முழுவதும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று, மாலை 4 மணியளவில் சவ அடக்கம் நடைபெறும். இன்று முழுவதும் அவரது சடலம், காந்தி பவனத்தில், மக்கள் தாங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தும் பொருட்டு, பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தும்.

சகல இராஜாங்க மரியாதைகளுடனும் அவரது சடலம் அடக்கம் செய்யப்படும்.

வாழ்க்கை வரலாறு

பிரகாசம் அவர்கள் இன்றைக்கு சுமார் 35 ஆண்டுகளுக்குமுன் காந்தியாரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, தேச விடுதலைப் போரில் ஈடுபட்டவர்; பன்முறை வெஞ்சிறை புகுந்தவர்; வீரத் தியாகி; ஆந்திரச் சிங்கமென மக்களால் பெருமையுடன் அழைக்கப்பட்டவர்.

அவர் காங்கிரசில் சேர்வதற்கு முன்னர், வக்கீல் தொழிலில் ஈடுபட்டிருந்தார்; லண்டனில் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்.

தமது இளமைப் பிராயத்தில் பிரகாசம் காரு, பல தெலுங்கு நாடகங்களில் பெண் வேடம் போட்டுக்கொண்டு நடித்திருக்கிறார்; நாடகம் என்றால் அவருக்கு அத்தனை பிரியமாம்.

அவர், 1937-39-ல், சென்னை மாகாணத்தில் ரெவினியூ மந்திரியாகவும், 1946 முதல் 1952 வரை சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்; 1946-1947-ல் சென்னை மாநில முதன் மந்திரியாகவும் இருந்தவர்.

ஆந்திர மாநில அமைப்பிற்காகவும், 'விசால ஆந்திரத்திற்காகவும் இடைவிடாது போராடி வெற்றிகண்ட வீரர்.

1953-ல் ஆந்திர மாநிலம் உருவானபோது அதன் முதல் முதன் மந்திரியாகப் பதவி ஏற்றிருந்தவர். 1955-ல் ஆந்திராவில் நடைபெற்ற தேர்தலில், ஒங்கோல் தொகுதியிலிருந்து ஆந்திர சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

அவரது மறைவால் துயரும் அவரது உறவினர்களுக்கும் ஆந்திர சோதரர்களுக்கும் நாம், நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்.)

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய — திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிரோட்டம் உலகு அறிய

'HOMELAND'

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர் : அண்ணா

★

2--6--57 முதல் ஞாயிறு தோறும் வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1×4 அளவில்
8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்

தனி இதழ் 2 அணா — ஆண்டு சந்தா ரூ 7.

விவரங்கட்கு: நிர்வாகி, 'ஹோம்லண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு : காஞ்சிபுரம்

சி. பி. சிற்றரசு தெளிவுரை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மனித உள்ளம் தன்னைப் பரிசோதனை செய்துகொள்வதற்காக நேர் எதிரான கருத்துக்களைப் பெற வேண்டியது தேவைப்படுகிறது. இதை பெரும்பான்மைக் கட்சியினர் என்று சொல்லிக்கொள்ளும் ஆளும் கட்சியினரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய பெரும் பணியிலே ஈடுபட்டிருக்கிற பெரும்படையிலே சேர்ந்து பணியாற்றிய தோழர் பாண்டியன் இன்றில்லை.

"மேலும் சிலவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது, அண்மையிலே நடந்த தேர்தல் பற்றியதாகும்; 'தேர்தலிலே தோற்றவர்கள் ஆத்திரத்தாலும் அவமானத்தாலும், அடைந்த நட்டத்தாலும் வென்றவர்களைத் திட்டுவார்கள்' என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் இங்கு நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது; வென்றவர்கள் தோற்றவர்களை மேடைதோறும் திட்டிக்கொண்டிருக்கின்றார்கள்; இதன் உட்கருத்து என்ன? இந்தத் தடவை எப்படியோ—அனுபவமில்லாத காரணத்தாலோ--பண வசதி இல்லாத காரணத்தாலோ தி.மு.கழகத்தினர் பல இடங்களை சிறிய வித்தியாசத்தில் இழந்துவிட்டனர். 'அடுத்த தேர்தலில் இந்த மாகாணமும் ஒரு கேரளமாய் விடுமோ? அங்கே நம்பூதிரிபாட் - இங்கே அண்ணா என்ற நிலை வந்து விடுமோ?' - என்ற பயந்தான் இதற்குக் காரணம் என்றால் இதை யார் மறுக்க முடியும்?

அச்சம் — கோழைகையின் குழந்தை

"'அச்சம் என்பது கோழைமையின் குழந்தை' என்றான் லாஸ்கி! அதேபோல், அதிகாரத்திற்குத் தனியான பலம் இல்லை; பிறருடைய அச்சந்தான் அதற்குப் பலமாக அமைகிறது. அதன் காரணமாகவே அது சதா பிறரை பயமுறுத்திக்கொண்டே இருக்கிறது?

"அதற்கு மற்றொரு பயமுமுண்டு; அது, 'பிற சக்திகள் தன்னை எந்த நேரத்திலும் தாக்கிவிடலாம்' என்பது! அதனால்தான் அந்த அதிகார சக்தி எப்போதும் படைபலத்தோடு இருக்கிறது.

"ஆகவேதான், சுதந்திர எழுச்சி கொண்டு விடுதலை முரசு கொட்டும் நமக்கு எதிரிகள் ஏராளமாகத் தோன்றுகிறார்கள்; தோன்றியதைப் போலவே சிலர் மறைந்து போகிறார்கள்; சிலர் மறந்து போகிறார்கள். இதற்கு உதாரணமான மனிதராக அன்பர் ஆச்சாரியார் இரண்டாவது வரிசையிலே இடம் பெறுகிறார்.

வேண்டாதவர்கள் வேண்டியவர்களாகிறார்கள்

"இப்படி ஒருகாலத்தில் நமக்கு வேண்டாதவர்களாயிருந்தவர்கள் எல்லாம் இன்று வேண்டியவர்களாயிருக்கின்றார்கள் 'எதிரிக்கு எதிரி நம்முடைய தோழன்' என்ற முறையிலேதான் சேர்ந்திருக்கிறார்களா - அல்லது உள்ளபடியே நம்மீது அல்லது நம் கொள்கையின்மீது பற்றுதல் ஏற்பட்டு இப்படி மாறியிருக்கிறார்களா என்பதை நாம் ஆராய்ச்சிக்கு ஏற்றதாக எடுத்துக்கொள்ளவில்லை; ஆனால் அறிவுக்கு விருந்தாக எடுத்துக் கொள்கின்றோம். எது எப்படியிருந்தாலும், நமது இலட்சியங்கள் பலரை கண் விழிக்கச் செய்திருக்கின்றன என்பது மட்டிலும் உண்மை. அந்த அளவுக்கு நம்முடைய உழைப்பு வீண் போகவில்லை என்ற உண்மையை மறப்பதற்கில்லை!

கைம்மாறு கருதாத காளையர்

"நம் கழகத்தில் 40 வயதிற்கு மேலானவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே உள்ளனர். அதற்குக் கீழான வாலிப வயதுடைய இலட்சக்கணக்கான காளையர் அணிவகுத்து நிற்கின்றனர். தினவெடுத்தத் தோள்களோடு, உறுதிபடைத்த மனத்தோடு,முறுக்கேறியநரம்புகளோடு நிற்கின்றனர். இவர்கள் பருவத்தைக் கொண்டே நம் கழகத்தின் பருவத்தைக் கணித்துவிடலாம்.

"தொட்டால் துவண்டுவிடும் நிலையிலே கழகம் இல்லை! தாக்கினால் தவிடுபொடியாகும் நிலையிலே திராவிடத் தொண்டர்கள் இல்லை! உலுக்கினால் உதிர்ந்துவிடும் பழப்பருவத்தில் யாரும் இல்லை!

"அவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கவேண்டிய மகத்தான பெரும்பணியிலே அவர்கள், 'என்றும் பின்னடையமாட்டோம்,' என்று நடைபெற்ற தேர்தலிலே சொல்லாமல் சொன்னார்கள்.

"கைம்மாறு கருதாமல், கண் துஞ்சாமல், விசை கொண்ட பம்பரமெனச் சுற்றினார்கள்.

"நன்றி கொல்லாத் திராவிடம் அவர்களை என்றும் மறக்காது. ஆகவே, அருமை இளைஞர்களே! இன்றுபோல் என்றும் பணியாற்றுங்கள்! அரசியல் விவேகம் கொள்ளுங்கள்! 'நாங்கள் அறிவாலயம் செல்கிறோம்—ஆகவே, ஆண்டவன் கோயிலுக்குச் செல்ல நேரமில்லை,' என்று சொல்லுங்கள்!"

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.